1984 மார்ச் 9]

ராட்டைகளில் நூல் நூற்கும் நிலையங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயம்.

194—(*வினா எண். 20996) திரு. டி. மணி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்க் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் உள்ள 6 கதிர், மற்றும் 12 கதிர் ராட்டைகளில் நூல் நூற்கும் நிலையங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சிட்டத்திற்கு 21 காசுகள் என்ற கூலியை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச போனஸ் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) இப்பொழுது நடைமுறையில் உள்ள கூலி விகிதப்படி, 6 கதிர் ராட்டையில் நூற்போருக்கு சிட்டம் ஒன்றுக்கு 26 பைசா வீதமும், 12 கதிர் இராட்டையில் நூற்போருக்கு சிட்டம் 1-க்கு 21 பைசா வீதமும் கூலி கொடுக்கப்படுகிறது. இத்துடன் 8 சதவீத ஊக்குவிப்பு கூலியும் 15—8—81 முதல் அளிக்கப்படுகிறது. 1—4—84 முதல் மேலும் கூலியை உயர்த்தும் உத்தேசம் காதி கமிஷன் பரிசீலனையில் உள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணையம் அமைத்துள்ள மாநில அத்தாட்சிக் குழு அவ்வப்போது கூலி நிர்ணயம் செய்து வருகிறது. கூலியை வாரியம் தன்னிச்சையாக உயர்த்த இயலாது.

(ஆ) கதர் கிராமத் தொழில்கள் இலாப நோக்கத்துடன் தொடங்கப்பட்டவை அல்ல. கதர் கிராமத் தொழில்களுக்கு போனஸ் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, வாரியம் போனஸ் அளிக்க இயலாது.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கதர் கிராம வாரியத்தில் வேலை செய்கின்றவர்கள், பெருவாரியான பெண்கள் வேலை செய்யும்போது அவர்களுக்கு குறைந்த பட்சம் என்ற முறையில் கூலி கொடுக்க வேண்டிய திட்டம் இருக்கிறதா? சிட்டம் ஒன்றுக்கு 21 பைசா என்றிருக்கிறது. ரூ. 2, 3-க்குத்தான் அவர்கள் வேலை செய்ய முடியும். ஆகவே, விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் சம்பளம் நிர்ணயித்து இருக்கின்ற இந்த நேரத்தில், அந்த அளவிற்கு வருமானம் கிடைக்கக் கூடிய அளவில், ஒரு சிட்டத்திற்கு இவ்வளவு காசு என்று சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 9

திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய கூலி ரூ. 2, 3 என்ற வீதத்தில் கூறினார்கள். ஆனால் அவர் கூறுவது தவறான கருத்து என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் ஒவ்வொரு பகுதியாக செல்லும்போது, அவர்களிடையே நேரடியாகக் கேட்கும்போது, அவர்கள் எந்த விதத்தில் வேலை செய்கிறார்களோ, எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்களோ, அதற்குத் தகுந்த கூலி கொடுக்கப்பட்டுவருகிறது. இப்போது நூற்பு நிலையங்களில் தினம் ஒன்றுக்கு 16 முதல் 20 சிட்டங்களை 6 கதிர் இராட்டைகளில் நூற்கிறார்கள். 12 கதிர் இராட்டைகளில் தினம் ஒன்றுக்கு 25 முதல் 30 சிட்டங்கள் வரை நூற்க முடிகிறது. நூற்போர்கள் தங்களது திறனுக்கு ஏற்ப நூல் உற்பத்தி செய்து வருகின்றனர்.

திரு. டி. மணி: சமீபத்தில் முன்னால் பொறுப்பு வகித்திருந்த இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களும், கதர் வாரியத்தினுடைய தலைவர் அவர்களும் குமரி மாவட்டத்தில் முழுக்காடு கதர் நிலையத்திற்கு நேரடியாக வருகை தந்தார்கள். அங்கே 100 அல்லது 50 பெண்கள் வேலை செய்கின்ற அந்தப் பகுதியிலே 5, 6 பேர்தான் சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் வேலை செய்து ரூ. 4, 5 சம்பளம்பெறக் கூடிய வகையிலே இருக்கிறார்கள். பெருவாரியானவர்களுக்கு அந்த அளவு சம்பளம் பெறக்கூடிய வகையில் வருவதில்லை. அதைப் பற்றி நான் அன்றைக்கே அவர்களிடம் கூறினேன். இந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது பல்வேறு துறைகளிலே குறைந்த பட்ச போனஸ் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இந்தத் துறையிலேயே லாப நஷ்டக் கணக்கு என்று பார்க்காமல் இந்தத் துறையிலே உள்ள தொழிலாளர்களுக்கும் வருடம் ஒன்றுக்கு இவ்வளவு என்று குறைந்தபட்ச போனஸ் கொள்கையை இந்தத் துறைக்கும் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல கூலியை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் தற்போது கதர்த் துறை வாரியத்தில் இல்லை. இந்த விஷயம் காதி கமிஷன் பரிசீலனையில் உள்ளது என்று நான் ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளேன். நான் இன்று ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு மாவட்டமாகச் செல்லும்போது, அந்தந்தப் பகுதிகளில் உள்ள நூற்பு ஆலைகளில் வேலை செய்கின்ற பெண்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமாக, தங்களுடைய திறமைக்கு ஏற்றவாறு வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய திறமைக்கு ஏற்றவாறு அவர்கள் கூலியைப் பெறுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1-4-1984 முதல் காதி கமிஷன்

1984 மார்ச் 9]

பரிசீலனையில் இந்தக் கருத்து இருந்து வருகிறது. அதனுடைய பரிசீலனை முடிந்த பிறகு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. தகவல் கோரல்

(அ) மழையினால் பாதிக்கப்பெற்ற தென் மாவட்டங்களில் நடைபெறும் நிவாரணப் பணிகள்

* திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று எழுப்பிய பிரச்சினை பற்றித்தான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு காலையிலே எனக்கு எங்கள் கட்சித் தோழர் சேது என்பவரிடமிருந்து தொலை பேசி மூலமாகத் தகவல் வந்திருக்கிறது. கூமாப்பட்டிப் பகுதியிலே இன்று வரையிலே, அதாவது இன்றைய காலை வரையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான நிவாரண உதவியும் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அரிசி, மண்ணெண்ணெய் இன்னும் அன்றாடத் தேவைக்கு வேண்டிய பொருள்கள் இல்லாமல் மிகவும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நிவாரண உதவி கேட்டபோது கலெக்டர் அவர்கள் அங்கே இருக்கும் கூட்டுறவு நிறுவன S.O. வாய் மூலமாக சொன்னதால்; எந்தப் பொருளும் தர முடியாது என்று கூறுவதாகவும் சொல்லுகிறார்கள். எனவே அந்த ஊரில் இன்றைக்கு வரையிலும் எந்தவிதமான உதவியும் செய்யப்படவில்லை. அங்கே இந்த வெள்ளத்தால் விவசாயம் முழுவதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட இடங்களைப் போய் எந்த அதிகாரியும் பார்க்கவில்லை என்று சொல்கிறார்கள். நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல தகவல்களை இங்கே சொல்லி இருக்கிறார்கள். அதே போல் வத்திராயிருப்பு என்ற அந்தப் பகுதியில் சுமார் 1,500 வீடுகள் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 2,000 மக்கள் அந்த ஊரில் வீடுகள் இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மக்களுக்கு உடனடித்தேவையான அரிசி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் தருவதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட இடங்களில் செய்ய வேண்டிய உதவிகளை உடனடியாகச் செய்ய வேண்டும். நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று இருப்பதாகத் தகவல் இருக்கிறது. எனவே இந்த கூமாப்பட்டி என்ற அந்த ஊரிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்